**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா,பி.ஏ.,பி.எல்.,(Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 03 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.591/2024**

CNR.No.TNKR03-001452-2022

1. சின்னப்பிள்ளை, கணவர் பெயர் மாரியப்பன், இந்து, சுமார் 64 வயது, வசிப்பிடம்: மேற்குத் தெரு, கேர் காலனி (Care colony), அமராவதி நகர், புலியூர், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

2. பேச்சியம்மாள், கணவர் பெயர் மாணிக்கம், இந்து, சுமார் 62 வயது, வசிப்பிடம்: ரைஸ் மில் தெரு, பழைய ஜெயங்கொண்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம்.

...வாதிகள்

**//எதிர்//**

1. அங்கம்மாள், கணவர் பெயர் மாணிக்கம், இந்து, சுமார் 68 வயது, வசிப்பிடம்: கதவு எண். 22/8, ரைஸ் மில் தெரு, பழைய ஜெயங்கொண்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம்.

2. வசந்தா @ வசந்தாமணி, கணவர் பெயர் மாதவன், இந்து, சுமார் 57 வயது, வசிப்பிடம்: கதவு எண். 387, பி. கடம்பன்குறிச்சி, கடம்பன்குறிச்சி அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம்.

3. வேம்பாயி, கணவர் பெயர் முருகேசன், இந்து, சுமார் 60 வயது, வசிப்பிடம்: கருப்பம்பாளையம், கருப்பம்பாளையம் கிராமம், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

4. ரெங்கசாமி, தந்தை பெயர் அருணாசலம், இந்து, சுமார் 55 வயது, வசிப்பிடம்: கதவு எண். 22, கீழூர் 2 வது தெரு, பி. வெள்ளாளப்பட்டி, புலியூர் கிராமம், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

...பிரதிவாதிகள்

வாதிகள் தரப்பில் பாகப்பிரிவினைக்கான இந்த தாவாவில், வாதிகளுக்கு தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 6 சமபாகங்களாக பாகப்பிரிவினை செய்து அதில் 2 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் வேண்டியும், 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் 4 வது பிரதிவாதி பெயரில் உருவாக்கப்பட்ட கிரைய பத்திரங்கள் வாதிகளின் பாகத்தை

பொறுத்து செல்லாது என்றும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை உள்ளிட்ட பரிகாரங்கள் கோரி இந்த தாவா.

தாவா தாக்கல் செய்த நாட்கள் : 12.11.2024

அதிகார வரம்பிற்கும் நீதிமன்ற கட்டணத்திற்குமான தாவாவின் மதிப்பு ரூ.1,26,266/-

நீதிமன்ற கட்டணம் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 22 ன் கீழ் ரூ5,300/- செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கிற்கான வியாஜ்ஜிய மூலம் 28.05.1971 கரூர் டவுன் இந்நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ளது.

<u>மதீப்பீட்டு விவரம்</u>

**1. For the relief of partiton (Prayer a):**

Market value of the 1st item of suit property is –Rs.2,61,600/-

Market value of the 2nd item of suit property is –Rs.87,500/-

Total Value is – Rs.3,48,800/-

The Plaintiff's 2/6 share value comes to Rs.1,16,266/-

On this fixed Court fee of Rs.5000/- is paid under section 37(2) of T.N.C.F & S.V. Act.

**2. For the relief of partiton (Prayer b):**

The notional value of the plaintiffs is Rs.1000/- but the higher value adopted is Rs.5000/- and the court fees is paid u/s 25(d) of T.N.C.F & S.V. Act. Is Rs.150/-

3. **For the relief of partiton (Prayer c):**

The notional value of the plaintiffs is Rs.1000/- but the higher value adopted is Rs.5000/- and the court fees is paid u/s 25(d) of T.N.C.F & S.V. Act. Is Rs.150/-

Total Valuation -Rs.1,26,266/-

Total Court fee is paid Rs.5,300/-

இவ்வழக்கானது கடந்த 10.06.2026-ம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 4 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு N. சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், 4 வது பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 4 வது பிரதிவாதியை தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதிகள் தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்பாணை**</u>

1. வாதிகளின் தாவாவை அனுமதித்து தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 2/6 பாகம் கூட்டாக உள்ளது என்று விளம்புகை செய்து, அதை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கியும், 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் 4 வது பிரதிவாதி பெயரில் உருவாக்கப்பட்ட கிரைய பத்திரங்கள் வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இரு தரப்பினரும் ஆஜராக வாய்தா 17.07.2026.

2) இத்தாவா செலவுத் தொகையினை ----------யை பிரதிவாதி வாதிக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.செலவுத் தொகைப் பட்டியல் தாக்கல் இல்லை.

| **செலவுத்தொகை பட்டியல்** | | **வாதி ரூ.பை.** |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | – | – |
| வக்காலத்து | – | – |
| கட்டளை செலவு | – | – |
| வழக்கறிஞர் ஊதியம் | – | – |
| **மொத்தம்** | – | – |

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் நாளிடப்பட்ட தீர்ப்பாணையில் இன்று என்னால் கையொப்பம் செய்யப்பட்டும் நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K L PRIYANGA

Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**